THE HON SRI V. RAMAIAH : இந்த் நோட்டைப் படித்துப் பார்த்தால், உப கேள்வி கேட்பதற்கு ஒன்றுமே இல்லை என்பது தெரியும். ஏனென்றால் அதில் கமிட்டியின் ரிப்போர்ட்டு இருக்கிறது ; அரசாங்கம் என்னென்ன சொல்லியிருக்கிறது என்பதை விளக்கமாகத் தந்திருக்கிறோம். நோட்டைப் படித்த பிறகு, இன்னும் அதிகமாக விவரங்கள் வேண்டுமானால், தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

SRI S. M. ANNAMALAI : இந்தக் கேள்வியின் பதிலை கனம் அங்கத்தினர்கள் படிக்க ரொம்ப நேரமாகும். எனவே இந்தக் கேள்வியை நாளை எடுத்துக்கொள்ளலாம்.

MR. SPEAKER : கனம் மந்திரி பதில் சொல்லட்டும். அதற்குப் பிறகுதானே கேள்வி வேண்டுமா, வேண்டாமா, அதிக நேரம் உப கேள்விகளுக்கு வேண்டுமா வேண்டாமா என்பதையெல்லாம் தீர்மானம் பண்ண முடியும் ?

Recommendations of the Road Transport Re-organization Committee

*775 *Q.*—SRI T. S. RAMASWAMI (on behalf of SRI K. SATTANATHA KARAYALAR) : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether this Government have received a copy of the recommendations of the Road Transport Re-organization Committee (Masani Committee) from the Government of India ;

(*b*) whether this Government have expressed their views in the matter ; and

(*c*) if so, what they are ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Yes, Sir.

(*b*) Yes, Sir.

(*c*) A statement [*] containing the views of this Government communicated to the Government of India is placed on the table of the House.

MR. SPEAKER : கனம் அங்கத்தினர்கள் இப்போது உப கேள்விகள் போடலாம்.

SRI S. M. ANNAMALAI : மேஜையில் வைக்கப்பட்டிருக்கும் நோட் 14 பக்கங்களுக்கு இருக்கிறது. எனவே இந்தக் கேள்விக்கு உப கேள்விகள் போட நாளை கனம் அங்கத்தினர்களை அனுமதிக்க வேண்டுமென்று தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

MR. SPEAKER : ஒவ்வொரு பேபரும் சபையில் சபை ஆரம்பமாவதற்கு அரை மணி நேரம் முன்னதாக வைக்கப்படுகிறது. கனம் அங்கத்தினர்கள் சபைக்கு முன்னதாக வந்து அவைகளைப் படித்து, உப கேள்விகள் போடத் தயாராயிருக்க வேண்டும்.

SRI S. M. ANNAMALAI : இந்த நோட் இன்று காலையில்தான் மேஜையில் வைக்கப்பட்டிருக்கிறது. எனவே இதைப் படிக்க முடியவில்லை. இந்தக் கேள்வியை நாளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

MR. SPEAKER : இந்தக் கேள்வியை நாளை எடுத்துக்கொள்ளலாம். நோட்டைப் படிக்கவில்லை என்று கனம் அங்கத்தினர் ஸ்ரீ எஸ்.எம். அண்ணாமலை சொல்கிறாரே.

THE HON. SRI V. RAMAIAH : We may take up both the questions tomorrow, Sir.

---

[*] Printed as Appendix I on pages 81–91 infra.

Mr. SPEAKER : கேள்வி 672-ஐ இப்போது முடித்துவிடுவோம். கேள்வி 775-ஐ நாளை எடுத்துக்கொள்வோம்.

Mr. SPEAKER: Next question.

Sri T. S. RAMASWAMI rose . . .

Mr. SPEAKER: The hon. Member must have got up quickly before I called the next question.

Sri T. S. RAMASWAMI: Sir, I got up in my seat and also raised my hand.

Mr. SPEAKER: All right. Let the hon. Member put the question.

Sri T. S. RAMASWAMI: Sir, may I know what prompted the Government to come to this conclusion, especially with reference to recommendation No. 4 in Chapter 2 and recommendation No. 11 in Chapter 3 of the report?

The Hon. Sri V. RAMAIAH: Sir, as both the questions, Nos. 672 and 775 relate to the same subject, I suggest that both of them may be taken up tomorrow for putting supplementary questions.

Mr. SPEAKER: Yes, I have no objection.

Hospital for Ananthapuram village

* 764 *Q.*—**Sri S. M. ANNAMALAI** : கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம், போளூர் தாலூகா, அனந்தபுரம் கிராமத்திற்கு வைத்தியசாலை கோரி, 1–7–1959-ல் மகசரும், எஸ். எம் அண்ணுமலையின் கடித எண் SMA/5 F vol. 111-1/48, தேதி 23–1–60-ம் வந்ததா ?

(ஆ) அப்படியாளுல் அவைகளின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

The Hon. Sri M. A. MANICKAVELU: (*a*) Yes, Sir.

(*b*) The matter is under consideration.

Import of leather goods

* 765 *Q.*—**Sri V. K. KOTHANDARAMAN**: கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) தோலால் செய்யப்படும் என்னென்ன சாமான்கள் இந்த ராஜ்யத்தில் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன ?

(ஆ) 1951 முதல் 1957 வரை எவ்வளவு மதிப்புடைய சாமான்கள் ?

The Hon. Sri R. VENKATARAMAN: (*a*) & (*b*) A statement [a] is placed on the table of the House.

Sri V. K. KOTHANDARAMAN: : ஸார், தோலிலிருந்து செய்யக்கூடிய சாமான்கள் இறக்குமதியாவது 9,73,976 ரூபாய் மதிப்பில் இருந்து 5,21,262 ரூபாயாகக் குறைந்திருப்பதைப் பார்க்க சந்தோஷப்படக் கூடிய நிலைமை இருந்த போதிலும் நம் நாட்டிலிருந்து தோலை வாங்கிக் கொண்டுபோய் அங்கே பல ரூபத்தில் செய்து மீண்டும் நாமே அதை

---

[a] Printed as Appendix II on page 92 infra.